# வருவாய்த்துறை அலுவலர் சங்கக்குரல்

# Varuvaithurai Aluvalar Sangakural

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாத இதழ்

Volume 36 April 2024 Issue 4




தனிப்பிரதி விலை ரூ.10/-
Per Copy Rs.10/-

ஆண்டு சந்தா ரூ.120/-
Annual Subscription Rs.120/-

## தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் சார்பில் மார்ச் மாதம் நடைபெற்ற காலவரையற்ற வேலை நிறுத்தத்தின் போது சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் அமைச்சர் பெருமக்களை சந்தித்து முறையீடு அளித்த நிகழ்வுகள்




சட்டமன்ற பேரவை துணைத் தலைவர் மாண்புமிகு கு.பிச்சாண்டி அவர்களிடம் மனு அளித்தபோது



மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வசதி வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களிடம் மனு அளித்தபோது




மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்களிடம் மனு அளித்தபோது

# நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2024:

## "பார் போற்றும் ஜனநாயக திருவிழா; நாம் முக்கிய அங்கம் என்பதில் பெருமை கொள்வோம்!"

உலகில் மிகப்பெரிய ஜனநாயக நடவடிக்கையாக கருதப்படும் இந்திய துணைக் கண்டத்தின் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து இரவு-பகலாக பல்வேறு பணிகளை ஓய்வின்றி மேற்கொண்டு, கடமையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் வாழ்த்துகள்!

இந்திய தேர்தல் வரலாற்றில் 1952ஆம் ஆண்டு தேர்தலுக்கு அடுத்தபடியாக இரண்டாவது நீண்டகால தேர்தலாக, 44 நாட்கள் இத்தேர்தல் நடைபெறுகிறது.

543 நாடாளுமன்ற தொகுதிக்கான தேர்தல் ஏழு கட்டங்களாக நடைபெற்று, வருகின்ற 4.6.2024 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 39 நாடாளுமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் முதல் கட்டத்திலேயே நடைபெற்றுள்ள நிலையில், தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதலாக மிகக் குறுகிய கால அவகாசத்தில், அனைத்துப் பணிகளையும் வருவாய்த்துறை அலுவலர்கள் செவ்வனே மேற்கொண்டுள்ளனர்.

தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட நிமிடத்தில் இருந்து, தேர்தல் நடத்தை விதிகளை முழுமையாக அமல்படுத்துதல், பறக்கும் படை உள்ளிட்ட பல்வேறு குழுக்களை அமைத்து கண்காணித்தல், வாக்காளர் பட்டியல் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை தயார் செய்தல், வாக்காளர் விழிப்புணர்வு பிரச்சாரம், தேர்தலுக்கான அனைத்து பொருட்களையும் தயாரித்தல், வாக்குச்சாவடிகளை தயார் செய்தல் என்பன உள்ளிட்ட பல்வேறு பணிகளை வருவாய்த்துறை அலுவலர்கள், இரவு-பகலாக ஓய்வின்றி மேற்கொண்டுள்ளனர்.

இதுவரை இல்லாத வகையில் தபால் ஓட்டுக்களை தபாலில் அனுப்பாமல், பதிவு செய்யப்பட்ட வாக்குகளை துணை வட்டாட்சியர் நிலைக்கு குறைவில்லாத அலுவலர்கள் நேரடியாக அந்தந்தத் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு நேரில் கொண்டு சேர்க்க வேண்டும் என தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது நமக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது.

இது குறித்து உடனடியாக தலைமை தேர்தல் ஆணையர் அவர்களுக்கு தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் முறையீடு செய்யப்பட்டு, மத்திய மாவட்டத்தில் இதற்கான மையம் அமைத்து பணிகளை எளிதாக்க கோரிக்கை வைக்கப்பட்டது.

தமிழக தலைமை தேர்தல் அலுவலரும் இதனை பரிந்துரைத்து இந்திய தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற்று, திருச்சியில் இதற்கான மையம் அமைத்து அனைத்து மாவட்டத்தினரும் வருகை தந்து பதிவு செய்யப்பட்ட வாக்குகளை பரிமாற்றம் செய்து கொள்ள வழிவகை செய்தது சிறப்பாக அமைந்தது.

நாடாளுமன்ற தேர்தலுக்கான நிதி முழுமையாக வழங்க வேண்டும் என கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில், முக்கிய கோரிக்கையாக முன்வைக்கப்பட்டு, அரசுடனான பேச்சுவார்த்தையின் போது வருவாய்த்துறை செயலாளர் மற்றும் முதன்மை தேர்தல் அலுவலர் ஆகியோரால் இதற்கான வாக்குறுதிகள் அளிக்கப்பட்டது.

இதன்படி மூன்று கட்டங்களாக பெரும்பான்மையான நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

19.4.2024 அன்று நடைபெற்ற பதினெட்டாவது மக்களவைக்கானத் தேர்தலில் தமிழகத்தில் சுமார் 70 சதவீத வாக்காளர்கள் தங்களது வாக்குகளை பதிவு செய்துள்ளனர்.

வருவாய்த்துறை அலுவலர்கள் ஓய்வின்றி தேர்தல் பணிகளை மேற்கொண்ட போதும், ஒருவர் கூட விடுதல் இன்றி வாக்களிக்க வேண்டும் என மாநில மையத்தின் சார்பில் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி அனேக அலுவலர்கள் தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்றியுள்ளனர்.

தற்போது நடைபெற்றுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கடந்த காலத்தில் பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் பொருட்களை விட அதிக அளவில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்படி தமிழ்நாட்டில் எந்தவித பெரும் அசம்பாவிதங்கள் இன்றி சமூகமாக தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளதன் பின்னணியில் ஒவ்வொரு வருவாய்த்துறை அலுவலரின் தன்னலமற்ற பணியும் அமைந்துள்ளது. சமூக ஊடகங்களும் இதனை சரியான வகையில் பிரதிபலித்துள்ளன.

மிகப்பெரிய ஜனநாயக திருவிழாவில் நாமும் முக்கிய அங்கம் என்பதில் பெருமிதம் கொள்வோம். வருவாய்த்துறை அலுவலர்களின் பணியினை இந்திய தேர்தல் ஆணையமும், அரசும் உரிய வகையில் அங்கீகாரம் செய்ய வேண்டும்.

வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகளை சரி செய்திட அனைத்து மாவட்டங்களுக்கும் நிரந்தர அடிப்படையில் பணியாளர்களை ஏற்படுத்திட வேண்டும் என்பதை விரைவில் நிறைவேற்ற வேண்டும்! ■




பணிப்பளுவால் உயிரிழந்த சேலம் மாவட்டம்,
மேட்டூர் தேர்தல் துணை வட்டாட்சியர் நர்மதா
அவர்களின் மறைவுக்கு
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்
ஆழ்ந்த அஞ்சலியை உரித்தாக்கிக் கொள்கிறது.

Most Immediate
**GELS, 2024 and Bye Election**
**233.Vi1avancode AC**
**By Fax /e mail/speed post**

PUBLIC {ELECTIONS.X) DEPARTMENT
SECRETARIAT, CHENNAI-600 009.

**Letter No.4062/Ele-X/2024-11, Dated: 1 1.04.2024**

From

Thiru.Satyabrata Sahoo, I.A.S.,

Chief Electoral Officer &

Principal Secretary to Government.

To

All District Election Officers (w.e.)

Sir/Madam,

Sub : Elections — General Elections to Lok Sabha, 2024 and bye election to Tamil Nadu Legislative Assembly, 2024 from 233-Vi1avancode Assembly Constituencies — Setting up of a centralised sorting facility for Polled Postal Ballots — regarding.

Ref : From the Election Commission of India, Letter No. 52/ 2023/ SDR/ Vol-IV Dated: 31.10.2023.

2. From the Election Commission of India, Letter No. 464/ TN-HP/ 2024/ SS-I/ Inst. dated 10.4.2024

*****

I am directed to invite attention to the reference cited wherein the Election Commission of India, among other things, has accorded permission for setting up of a sorting center for Postal Ballots at a centrallsed location, In this regard, I am to inform you that the centralised sorting facility is being set up at Tiruchirappalli Dlstrict (Kalaiarangam, Near Central Bus Stand) and will function on **17.4.2024** from **9.00 am onwards.** I am therefore to request you to arrange to send the polled postal ballots in your district by following the procedure detailed below.

- The Postal Ballot Nodal Officer of your district, along with one or two officials to assist him and one armed Police escort shall be deputed to Tiruchirappalli. The teams shall reach Tiruchirappalli **before 9.00 am on 17.4.2024 positively.**
- The DEO Tiruchirappalli shall be informed in advance regarding the composition of the district teams beirig deputed.
- The team shall collect all the postal ballots polled at all the facilitation centres in your districts at all levels, sort the same **Parliamentary Constituency wise** and **DATEWISE** and place them in sealed cotton bags with name of Parliamentary Constituency, date of polling, and number of postal ballots polled, written on the bag. To elaborate, postal ballots polled for a particular Parliamentary Constituency on different dates, must be placed in separate covers (date wise) and these covers should be placed in a large cover meant for that Parliamentary Constituency. The format to be pasted on the smaller covers (date wise} and the Large Cover are enclosed herewith.
- After reaching the sorting center, the bags will be handed over to the teams from the concerned Districts. Similarly, the teams will also collect the bags intended for their districts.
- After collection of their respective bags, the teams shall reach their respective districts with the polled postal ballots for their districts on or **before 18.4.2024** and deposit the same with the respective Returning Officers for safe custody.

**2. The Dietrict Election Officers shall ensure**

a) The safe and secure storage of the Postal Ballot be done as per the Commission's guidelines in a strong room

b) Recognised Political Parties/ contesting candidates shall be informed about the process in writing

c) The packets of polled Postal Ballots are to be sealed in the presence of Contesting Candidates /Agents of the political parties concerned in the large envelope /cotton bag meant for the Parliamentary Constituency.

d) Videography should be done during the process of segregation and packing of the packets (Parliamentary Constituency wise) containing polled postal ballot.

e) Proper security arrangements and CCTV surveillance is provided at the Strong Room as per the guidelines for the Commission regarding storage of Postal Ballot.

f) All other relevant guidelines and extant instructions of the Commission issued in this regard shall be adhered to strictly.

Yours faithfully,

for Chief Electoral Officer &

Principal Secretary to Government.

# இந்திய விடுதலைப் போரில் பங்கேற்ற தமிழக பெண் வீராங்கனைகள்

ஆகஸ்ட் 15, 2022, அன்று இந்தியா தனது 75வது சுதந்திர தின விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடியது. இது இந்திய சுதந்திரத்தின் பவள விழா ஆண்டு ஆகும். இதன் பின்னணியை, அதில் ஈடுபட்டு சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட, உயிர்த் தியாகம் செய்தவர்கள் ஏராளம், ஏராளம். சும்மா கிடைக்கவில்லை சுதந்திரம். வரலாற்றில் பதிவு செய்யப்பட்டவர்கள் கொஞ்சமே. வரலாற்றில் பதிவு செய்யப்படாத ஆண்கள், பெண்கள் ஏராளம். அவர்கள் இந்தியா முழுமைக்கும் விரவிக் கிடக்கின்றனர். தமிழகத்திலும் இந்திய விடுதலைக்காகப் போராடியவர்கள் உண்டு அவர்களில் நமக்குத் தெரிந்த தமிழகப் பெண் போராளிகளைப் பற்றி அறிந்து கொள்வோம்.

மன்னராட்சியோ, மக்களாட்சியோ எதுவாக இருந்தாலும் அரியணையில் அமர்ந்து ஆட்சி செய்பவர்களின் விருப்பத்திற்கேற்பவே சரித்திரங்கள் அரிதாரம் எடுக்கின்றன. சரித்திரங்கள் தற்போது வரலாறாக இல்லை. புராணங்களாக மாறிவிட்டதாகவே சொல்லலாம். கி.பி.7000க்குப் பிறகு இந்தியா அடிமைப்பட்டதாக கூறப்படுகிறது. அதாவது 1200 ஆண்டுகள் முகலாயர்களின் கீழும், பிறகு 150 ஆண்டுகள் ஆங்கிலேயர்களின் கீழும் இந்தியா அடிமைப்பட்டுக் கிடந்தது. வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் பல நூற்றாண்டுகளாக இந்தியாவிலேயே தங்கி இந்தியாவை ஆட்சி செய்தனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் தவிர வேறு எப்போதும் இந்தியாவின் சொத்தும் வளமையும் வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்படவில்லை. இந்தியாவின் செல்வங்கள் வெளிநாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டதை 'Drain and wealth" என்று பல ஆங்கிலேய பொருளாதார நிபுணர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

இந்திய சுதந்திரம் என்பது, கத்தியின்றி, ரத்தமின்றி, மென்மையான அகிம்சை வழிப் போராட்டங்களால் பெறப்பட்டதல்ல. லட்சக்கணக்கான ஆண்கள், பெண்களின் உயிரை விலையாய் கொடுத்துப் பெறப்பட்டதாகும். காந்தியின் வருகைக்கு முன்பாகவே, இந்திய மக்கள் பல்வேறு தலைவர்களின் கீழ், பல போராட்ட வடிவங்களின்கீழ் ஒன்றுதிரண்டு, பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடி வந்தனர். ஆயுதம் தாங்கியும், அகிம்சை வழியும் என இரு வேறு வடிவங்களில் இந்திய சுதந்திரப் போராட்டம் அதன் உச்சக்கட்டத்தை எட்டியது.

ஆண், பெண் இணைந்து பெற்றதுதான் இந்திய சுதந்திரம்.

இதில் ஆண்கள் மட்டுமன்றி, பெண்களும் அதிகளவு பங்களிப்பை வழங்கியுள்ளனர். அடித்தட்டு சமூக பெண்களில் தொடங்கி, உயர்குடி சமூக பெண்கள் வரை இதில் பாரபட்சம் இல்லை. தேச விடுதலைக்காக அவர்கள் ஒன்றிணைந்து போராடியுள்ளனர்.

இதன்படி, 1700களில் வீரமங்கை சிவகங்கை ராணி வேலு நாச்சியார்தான் முதன்முதலில், இந்திய சுதந்திரத்திற்கு விதை போட்ட பெண் வீராங்கனை. தன்னையே வெடிகுண்டாக (உலகின் முதல் தற்கொலைப் படை வெடிகுண்டு) மாற்றிக்கொண்ட தியாகத்தின் உருவான அவரது பணிப்பெண் குயிலி, கிட்டூர் ராணி சென்னம்மா, வேங்கையாய் மாறிய ஜான்சிராணி லட்சுமிபாய், அயோத்தியின் தியாக சின்னமான பேகம் ஹசரத் மஹல், விசுவாசத்தின் மறுவடிவமான அதனாலேயே வெள்ளையர்களாலும் போற்றப்பட்ட ஜல்காரி பாய், நான்காயிரம் படை வீரர்களை திரட்டி ஆங்கிலேயர்களை பந்தாடிய ராம்காட் ராணி அவந்திபாய் உள்ளிட்டோர் கி.பி.1700 தொடங்கி, கி.பி.1900 வரையான வரலாற்றுப் பக்கங்களில் இடம்பெறுகின்றனர். இவர்கள் அனைவரின் போராட்டமும் தனித்துவம் வாய்ந்ததாகும்.

அது 16ஆம் நூற்றாண்டின் கடைசி ஆண்டு. உலகின் மொத்தப் பொருட்களின் உற்பத்தியில் 25% இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டது. இதே காரணத்திற்காக இந்த நாடு "தங்கப் பறவை" என்று

அழைக்கப்பட்டது. அப்போது, முகலாயப் பேரரசர் ஜலாலுதீன் முஹம்மது அக்பர் டெல்லியை ஆண்டார். அவர் உலகின் பணக்காரப் பேரரசர்களில் ஒருவர். அப்போது பிரிட்டன் உள்நாட்டுப் போரினால் தத்தளித்துக் கொண்டிருந்தது. அதன் பொருளாதாரம் விவசாயத்தை சார்ந்தே இருந்தது.

உலகின் மொத்தப் உற்பத்தியில் 3% மட்டுமே அங்கு உற்பத்தி செய்யப்பட்டது. இங்கிலாந்தை முதலாம் எலிசபெத் மகாராணி ஆட்சி செய்தார். ஐரோப்பாவின் முக்கிய வல்லரசுகளான போர்த்துகீசும், ஸ்பெயினும் வர்த்தகத்தில் பிரிட்டனைப் பின்னுக்குத் தள்ளின. வணிகர்கள் என்ற போர்வையில், போர்ச்சுகல் மற்றும் ஸ்பெயினின் வணிகக் கப்பல்களை பிரிட்டிஷ்காரர்கள் கொள்ளையடித்தனர்.

அப்போது திரை கடலோடி வணிகம் செய்து வந்த பிரிட்டிஷ் தொழிலதிபர் ரால்ஃப் ஃபிட்ச், இந்தியப் பெருங்கடல், மெசபடோமியா, பாரசீக வளைகுடா, தென்கிழக்கு ஆசியா ஆகிய நாடுகளுக்கு வணிகப் பயணங்கள் செய்து, இந்தியாவின் செழிப்பை அறிந்தார். ரால்ஃப் ஃபிட்சின் பயணம் மிக நீண்டது. அவர் பிரிட்டனுக்குத் திரும்புவதற்கு முன்பு அவர் இறந்ததாகவே கருதப்பட்டார். லேவண்ட் நிறுவனம் கிழக்கத்திய நாடுகளிலிருந்து மசாலா பொருட்களைப் பெற இரண்டு முறை முயன்று தோல்வியை தழுவியது.

இந்தியாவைப் பற்றிய ரால்ஃப் ஃபிட்சின் தகவல்களின் அடிப்படையில், பிரிட்டனிலிருந்து 200க்கும் அதிகமான செல்வாக்கு மிக்க மற்றும் தொழில்முறை வல்லுநர்களுடன், இந்தியாவை நோக்கி செல்ல வேண்டும் என்ற எண்ணம் பன்னாட்டு வணிகரான ஜேம்ஸ் லான்னஸ்டருக்கு வந்தது. அவர் டிசம்பர் 31, 1600 அன்று ஒரு புதிய நிறுவனத்திற்கு அடித்தளம் அமைத்து, கிழக்கு ஆசியாவில் வர்த்தக உரிமையையும் இங்கிலாந்து ராணியிடமிருந்து பெற்றார்.

இந்த நிறுவனத்திற்குப் பல பெயர்கள் இருப்பினும், இது கிழக்கிந்திய கம்பெனி என்று அழைக்கப்படுகிறது. மற்ற இடங்களில் பயணம் செய்த பின்னர், ஆகஸ்ட் 1608இல் கேப்டன் வில்லியம் ஹாக்கின்ஸ் தனது 'ஹெக்டர்" என்ற கப்பலை இந்தியாவின் சூரத் துறைமுகத்தில் நிறுத்தி, கிழக்கிந்திய கம்பெனியின் வருகையை அறிவித்தார். பிரிட்டனின் வர்த்தகப் போட்டியாளர்களான டச்சு மற்றும் போர்த்துகீசியர்கள் ஏற்கனவே இந்தியப் பெருங்கடல் பகுதியில் செயல்பட்டு வந்தனர். கிழக்கிந்திய கம்பெனி என்ற நிறுவனம், தன் நாட்டை விட 20 மடங்கு பெரிய நாடும் உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றான இந்தியாவை ஆளப்போகிறது என்று யாரும் நினைத்துக்கூடப் பார்த்திருக்க முடியாது.

அந்த நேரத்தில், பேரரசர் அக்பர் உயிரிழந்தார். அப்போது சீனாவின் மிங் வம்சத்து அரசர் மட்டுமே அக்பருக்கு நிகரான சொத்துக்களுடன் இருந்தார். காண்பி கான் நிஜாமுல்முல்க்-ன் முந்தகபுல்பாப் புத்தகம், அக்பர் ஐந்தாயிரம் யானைகள், பன்னிரண்டாயிரம் குதிரைகள், ஆயிரம் சிறுத்தைகள், பத்து கோடி ரூபாய், விலையுயர்ந்த நாணயங்கள், ஏராளமான தங்கம், முந்நூற்று எழுபது வெள்ளித் துண்டுகள், ரூ.3 கோடி மதிப்புள்ள ரத்தினங்களை விட்டுச் சென்றார் என்று கூறுகிறது.

அக்பரின் மகன் நூருதீன் சலீம், ஜஹாங்கிர் என்ற பட்டத்துடன் அரியணை ஏறினார். ஆட்சியில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து, காதுகள், மூக்கு மற்றும் கைகளை வெட்டும் தண்டனை ரத்து செய்யப்பட்டது. சட்டவிரோத வரிகள் நீக்கப்பட்டன. பொதுமக்களுக்கு மதுபானம் மற்றும் பிற போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல் மற்றும் சிறப்பு நாட்களில் விலங்குகளை வெட்டுதல் ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டது. சாலைகள், கிணறுகள் மற்றும் சத்திரங்கள் கட்டப்பட்டன. அடுத்தடுத்த சட்டங்கள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு நகரத்தின் அரசு மருத்துவமனைகளிலும் இலவச சிகிச்சை அளிக்க உத்தரவிடப்பட்டது. பொதுமக்களின் குறைகளைக் கூற அரண்மனைச் சுவரின் நீதிச் சங்கிலி தொங்க விடப்பட்டது.

அந்த நேரத்தில் ஐரோப்பாவில் நடந்ததைப் போல, போர் என்பது நாற்பது லட்சம் வீரர்களைக் கொண்ட முகலாய சேனையுடன் நடக்காத காரியம் என்று ஹாக்கின்ஸ் விரைவில் உணர்ந்தார் என உலகப் புகழ்பெற்ற வரலாற்று நிபுணர் வில்லியம் டெல்ரிம்பிள் கூறுகிறார். எனவே, இங்கே அவருக்கு முகலாயப் பேரரசரின் ஒத்துழைப்பும் அவரது ஆதரவும்

தேவைப்பட்டது. ஹாக்கின்ஸ் ஒரு வருடத்திற்குள் முகலாய தலைநகர் ஆக்ராவை அடைந்தார். படிப்பறிவில் குறைந்த ஹாக்கின்ஸ், ஜஹாங்கீரிடமிருந்து வணிக அனுமதி பெறும் முயற்சியில் வெற்றி பெற இயலவில்லை.

அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினரும் தூதருமான சர் தாமஸ் ரோ, அரசு தூதராக அனுப்பப்பட்டார். சர் தாமஸ் ரோ 1615இல் முகலாய தலைநகர் ஆக்ரா சென்றார். அரசரக்கு விலை மதிப்பில்லாத பரிசை வழங்கினார். அவை வேட்டை நாய்கள் மற்றும் அவருக்கு பிடித்த மதுபானம் ஆகியவை. பிரிட்டனுடன் நல்லுறவு கொள்வது, ஜஹாங்கீரின் முன்னுரிமையாக இருக்கவில்லை.

விவாதங்களின் போது வர்த்தகம் பேசுவதை விடுத்து, அரசர் குதிரைகள், கலைப்பொருட்கள் மற்றும் மதுவைப் பற்றி விவாதிப்பார் என்று தாமஸ் ரோ கூறுகிறார். சர் தாமஸ் ரோ மூன்று வருட தொடர்ச்சியான வற்புறுத்தலுக்குப்பின் இதில் வெற்றி பெற்றார். ஜஹாங்கீர் கிழக்கிந்திய நிறுவனத்துடன் வணிக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இந்த ஒப்பந்தத்தின் கீழ், இந்த நிறுவனம் மற்றும் அனைத்து இங்கிலாந்து வணிகர்களும் துணைக் கண்டத்தின் ஒவ்வொரு துறைமுகத்திலும், உரிமை கொள்ளவும் நிலங்களை வாங்கவும், விற்கவும் அனுமதிக்கப்பட்டனர். அதற்கு பதிலாக ஐரோப்பிய தயாரிப்புகள் இந்தியாவுக்கு வழங்கப்பட வாக்குறுதியளிக்கப்பட்டது. ஆனால் அப்போது அங்கே உற்பத்தி இல்லையே என்பது உணரப்படவில்லை என்பது விந்தையே.

நிறுவனத்தின் கப்பல்கள், அரண்மனைக்கு கொண்டுவரும் பழம்பொருட்கள் மற்றும் பரிசுகள் எதுவான இருந்தாலும் அவை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப்படும் என்று முடிவு செய்யப்பட்டது. நிறுவனத்தின் வணிகர்கள் முகலாயர்களின் ஒப்புதலுடன் பருத்தி, இண்டிகோ, பொட்டாசியம் நைட்ரேட் மற்றும் தேநீர் ஆகியவற்றை இந்தியாவில் இருந்து வாங்கி, வெளிநாடுகளுக்கு அதிக விலையில் விற்று பெரும் லாபம் ஈட்டினர். நிறுவனத்தின் அடித்தளமே வணிக மூலதனம்.

ஸ்பெயினுக்கும் அமெரிக்காவிற்கும் அடிமைகளை விற்பனை செய்வதன் மூலம் 1621 முதல் 1843 வரை குவிந்திருந்த வெள்ளியைக் கொடுத்து, நிறுவனம் அதற்கு ஈடான பொருளை வாங்கியது. 1670ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் பேரரசர் இரண்டாம் சார்லஸ் கிழக்கிந்திய கம்பெனியை வெளிநாடுகளில் போர்களை நடத்துவதற்கும் காலனித்துவப்படுத்து வதற்கும் அனுமதித்தார். பிரிட்டிஷ் இராணுவத்தின் ஆயுதப் படைக்கு முதலில் இந்தியாவில் போர்த்துகீசு, டச்சு மற்றும் பிரெஞ்சு போட்டியாளர்களுடன் போராடி பெரும்பாலான போர்களை வென்றன. படிப்படியாக, வங்காளத்தின் கடலோரப் பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. இவர்கள் ஆயுத பலம் அதிகமாக வைத்திருந்தமையால் இந்திய அரசுகள் ஆங்கிலேயர்களிடம் அடிபணிய நேரிட்டது. பல அரசுகள் ஆங்கிலேயர்களுக்கு கப்பம் கட்டும் சூழலும் உருவானது.

இப்படி இந்தியாவுக்குள் நுழைந்த ஆங்கிலேயர்கள் நம்மை சுமார் 300 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர்.

இந்திய விடுதலை இயக்கம் என்பது இந்தியாவில் இரண்டு நூற்றாண்டுகளாக நீடித்த ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சியையும் அதனை தொடர்ந்து வந்த ஆங்கில அரசின் ஆட்சியையும் முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில் தேசிய அளவிலும், மாநில அளவிலும் நடந்தது. இதில் நிகழ்ந்த கலகங்கள், அகிம்சை வழிப் போராட்டங்கள் முதலிய பல்வேறு நிகழ்வுகளைக் குறிக்கும்

ஒரு பரந்துபட்ட வரலாறு ஆகும். இவ்வியக்கம் பிரிக்கப்படாத இந்தியா மற்றும் அண்டை நாடுகளில் இருந்து ஆங்கில அரசை விலக்குவது மற்றும் அங்கெல்லாம் சுதந்திர அரசை ஏற்படுத்தி சுயாட்சியை நிர்மாணிப்பது முதலிய பல்வேறு நோக்கங்களாக எடுத்து செல்லப்பட்ட இயக்கம் ஆகும். ஆயுத வழி போராட்டங்கள் மட்டும் போதாது என உணர்ந்த காந்தியடிகளின் வருகை, இந்திய சுதந்திர போராட்ட வரலாற்றில் புதுமையான அத்தியாயத்தை உருவாக்கியது. எதிர் தாக்குதல்கள் எதுவும் இல்லாமல் அகிம்சை வழியில் போராட்டங்களை முன்னெடுத்தார்.

பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், வீரன் சுந்தரலிங்கம், மருது பாண்டியர், தளவாய் வேலுத்தம்பி, தாந்தியா தோப்பே, ஜான்சிராணி

இலட்சுமிபாய் ஆகியோரில் ஆரம்பித்து லோகமான்ய பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபால், மோதிலால் நேரு, பண்டித மதன் மோகன் மாளவியா, இலாஜா இலஜபதிராய், புரட்சித் தளபதி பாகாஜதீன், வ.உ.சிதம்பரம் பிள்ளை, வ.வெ.சுப்பிரமணிய ஐயர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், சுப்பிரமணிய சிவா, சத்தியமூர்த்தி, குதிராம்போஸ், சித்தரஞ்சன்தாஸ், நேத்தாஜி சுபாஸ் சந்திரபோஸ், கொடி காத்த குமரன், பகத்சிங், கே.பாஷ்யம் ஐயங்கார் போன்ற பல வீரர்களின் போராட்ட வரலாற்றில் பெற்றதுதான் இந்திய சுதந்திரம்.

1857 சுதந்திரப் போராட்ட எழுச்சியின் 150வது ஆண்டு விழாவை நினைவு கூறும் வகையில் இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கழகத்திற்காக (ஐ.சி.எச்.ஆர்) கலாச்சார அமைச்சகம் இந்தியாவின் சுதந்திரப் போராட்ட “தியாகிகள் அகராதி”யை தொகுக்கும் பணியை துவக்கியது. தியாகி என்பவர், இந்திய விடுதலைக்காக தேசிய இயக்கத்தில் பங்கேற்ற போது உயிர் நீத்த அல்லது அடக்குமுறையின் போது அல்லது சிறையில் இருக்கும் போது கொல்லப்பட்ட அல்லது மரண தண்டனை விதிக்கப்பட்டவர் என இந்த அகராதியில் விளக்கப்பட்டுள்ளது.

தேசிய அளவில் ஜான்சி ராணி இலட்சுமிபாய், கிட்டூர்ராணி சென்னம்மா, அவந்திபாய் அன்னிபெசன்ட் அம்மையார் போன்றோரும், தமிழகத்தில் வேலுநாச்சியார், தில்லையாடி வள்ளியம்மை போன்றோரைத் தவிர கடலூர் அஞ்சலையம்மாள், லட்சுமி ஷெகால், லீலாவதி அம்மையார் போன்ற பல பெண் போராட்ட வீரர்கள் வெளியில் அறியப்படாமல் உள்ளனர். இவர்களைத் தவிர இன்னும் ஏராளமான பெண் விடுதலைப் போராளிகள் உள்ளனர்.

## தமிழகத்தில் களம் கண்ட போராளிகள்

1. தமிழகத்தில் ராணி வேலு நாச்சியார் 2. தில்லையடி வள்ளிம்மை 3. மருத்துவ படிப்பை உதறிவிட்டு, சுதந்திர போர்க்களத்தில் குதித்த சிவகாமு அம்மா 4. கள்ளுக்கடை மறியலால் இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த நாகம்மாள் மற்றும் கண்ணம்மாள் 5. கதர் விற்பனையை அதிகப்படுத்த வேண்டுமென அதையே ஒரு ஆயுதமாய் மாற்றிட ‘சகோதரிகள் சங்கத்தை” துவக்கிய பத்மாசனி அம்மாள் 6. தாயம்மாள் 7. திருமதி.ஜோஸப் 8. திருமதி. சுந்தரமையங்கார் 9. சுப்புலட்சுமி அம்மாள் 10. டி.வி.எஸ். சௌந்தரம்

11. தாயாரம்மாள் 12. சீதையம்மாள் 13. முனியம்மாள் 14. டாக்டர் பிச்சைமுத்து அம்மாள் 15. சேலம் அங்கச்சி அம்மன் 16. கடலூர்; அஞ்சலையம்மாள், அவரது 12 வயது மகள் அம்மாக்கண்ணு 17. யாமினி பூரண திலகம்மா 18. திருமதி.மாசிலாமணி 19. திருமதி. ருக்மணி லட்சுமிபதி 20. எஸ்.அம்புஜம்மாள் 21. ஞானம்மாள் 22. பி.லீலாவதி 23. லலிதா பிரபு 24. பத்மாவதி அம்மா 25. கம்பீரமான குரல் வளத்தால் தேச பக்திப் பாடல்களைப் பாடிய கோதை நாயகி 26. கே.பி.சுந்தராம்பாள் 27. டிகே.பட்டம்மாள் 28. எஸ்.ஆர்.ரமாமணிபாய் 29. காந்தி புராணம் மற்றும் திலகர் புராணம் எழுதிய அசலாம்பிகை அம்மையார் 30.

ஆண்களே பெண்கள் வேடமிட்ட காலத்தில் துணிச்சலுடன் மேடையேறிய கே.பி.ஜானகி அம்மாள் 31. உலகப்போருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ததால் கைது செய்யப்பட்ட சொர்ணம்மாள் 32. அருப்புக்கோட்டை செல்லம்மாள் 33. அகிலாண்டத்தம்மாள் 34. லட்சுமிபாரதி 35. திருமதி.சௌந்தரம் ராமச்சந்திரன் 36. திருமதி.கிருஷ்ணசாமி 37. திருமதி.ராமசாமி 38. ஜமீந்தாரிணி ராதாபாய் 39. சி.ஆர்.சாரதாம்பாள் அம்மாள் 40. பியாரி பீபி

41. சரஸ்வதி பாண்டுரங்கம் 42. சொர்ணம்மாள் 43. லட்சுமி பாய் 44. எம்.ஆர்.கமலவேணி 45. கோவிந்தம்மாள் 46. லட்சுமிஷெகால் 47. அக்கம்மா செரியன் 48. பத்மாவதி ஆஷர் 49. லலிதா பிரபு 50. சிவகாமு அம்மா 51. என்.எம்.ஆர்.எஸ்.பர்வதவர்த்தினி 52. அஞ்சலை பொன்னுசாமி 53. எஸ்.என். சுந்தரம்மாள் 54. மரகதம் சந்திரசேகர்

இப்படியாக சுதந்திரப் போராட்டத்தில் களம்கண்ட பெண்களின் பட்டியில் நீள்கிறது.

இரா.மங்களபாண்டின்
மாநில துணைத்தலைவர்

தொலைபேசி எண் : 28593458

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

**THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION**

Recognised in G.O. Ms.No. 2141 Public (Service - A) Department Dated 06-10-1966

மாநில மையம்

க.எண்.12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.

நாள்: 27.3.2024

பெறுநர்

முதன்மைத் தேர்தல் அலுவலர்,

அரசு முதன்மைச் செயலாளர்,

பொதுத் (தேர்தல்கள்) துறை,

சென்னை 600 009.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : தேர்தல் 2024 நாடாளுமன்றத் தேர்தல் – தபால் வாக்குகள் – தபால் வாக்குகள் மற்றும் தொடர்பான ஆவணங்களை துணை வட்டாட்சியர் நிலைக்கு குறைவில்லாத அலுவலர்கள் நேரில் கொண்டு செல்ல அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது – நடைமுறை சிரமங்களைத் தவிர்க்க மாநிலத்தின் மையம் அமைக்கக் கோருதல் – தொடர்பாக

பார்வை : 1) இந்திய தேர்தல் ஆணையத்தின் கடிதம் எண்: 52/2023/SDR Vol.IV நாள்: 31.10.2023.

2) தமிழ்நாடு முதன்மை தேர்தல் அலுவலர் / அரசு முதன்மைச் செயலாளர், கடிதம் எண். பொதுத் (தேர்தல்கள்6)/2023-1, நாள்: 1.11.2023.

3) தமிழ்நாடு முதன்மை தேர்தல் அலுவலர் / அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் காணொளி கூட்டம் அறிவுரைகள், நாள்: 25.3.2024.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பார்வை 1 முதல் 3ல் காணும் குறிப்புகளில், 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட தபால் வாக்குகள் மற்றும் ஆவணங்களை சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி / பிற மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம், துணை வட்டாட்சியர் நிலைக்கு குறைவில்லாத அலுவலர்கள் மூலமாக நேரில் கொண்டு சேர்க்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. கடந்த கால தேர்தல்களில் தபால் மூலமாக அனுப்பப்பட்ட தபால் வாக்குகளை, தற்போது நேரடியாக கொண்டு சேர்ப்பதில் நிர்வாக மற்றும் நடைமுறை சிரமங்கள் ஏற்படும்.

பல்வேறு மாவட்டங்களில் உள்ள அலுவலருக்கான தபால் வாக்குகளை கொண்டு சேர்க்க துணை வட்டாட்சியர்கள், பாதுகாப்பிற்காக காவல்துறையினர், வாகனம் உள்ளிட்ட பெரும் ஏற்பாடுகள் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. இதற்கான பொருள் செலவும் அதிகமாகும். அதேபோல் சென்னை போன்ற பெருநகரங்களில் அநேக மாவட்டங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் தேர்தல் அலுவலர்களாக பணிபுரிவர்.

மாவட்டங்களில் உள்ள வட்டாட்சியர், துணை வட்டாட்சியர் உள்ளிட்ட அனைத்து நிலை வருவாய்த்துறை அலுவலர்களும் ஏற்கனவே தேர்தல் தொடர்பான பணிகளில் முழுமையாக ஈடுபட்டு வரும் நிலையில், இப்பணிக்கு கூடுதல் அலுவலர்களை நியமனம் செய்வதிலும் சிரமம் உள்ளது.

எனவே, பல்வேறு மாவட்டங்களுக்கு வருவாய்த்துறை அலுவலர்கள் மற்றும் காவல்துறையினர் நேரில் செல்வதற்கு மாற்றாக, மாநிலத்தின் மையப் பகுதியில் உள்ள ஏதேனும் ஒரு மாவட்டத்தில், இதற்கான 'சிறப்பு மையத்தினை' (Central Facilitation Centre) அமைத்து, குறிப்பிட்ட நாளில் அனைத்து மாவட்டத்தைச் சேர்ந்த அலுவலர்களும் வருகை தந்து தபால் வாக்குகள் மற்றும் ஆவணங்களை பரிமாற்றம் செய்து கொண்டால் இதிலுள்ள சிரமங்கள் வெகுவாக குறையும்.

தேர்தல் பணிகளை சிறப்பாக செயல்படுத்தும் வகையில் இதனை பரிசீலனை செய்து உரிய வழிகாட்டுதல்களை விரைவில் வழங்கும்படி கனிவுடன் கேட்டுக் கொள்கிறோம்

மிக்க நன்மதிப்புடன்.


தங்கள் நம்பிக்கையுள்ள,

| | |
|---|---|
| ஒம்/– | ஒம்/– |
| (சு.சங்கரலிங்கம்), | (எம்.பி.முருகையன்) |
| பொதுச் செயலாளர், | மாநிலத் தலைவர் |



கோவையில் 24.4.2024 அன்று தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் தோழர் செந்தில்குமார் முன்னிலையில் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது.

# வாக்காளர் பட்டியல் குளறுபடிகள்: தீர்வு என்ன?



பதினெட்டாவது மக்களவைக்கான வாக்குப்பதிவு தமிழ்நாட்டிலும் புதுச்சேரியிலும் ஒரே கட்டமாக முடிந்துவிட்டது. இத்தேர்தலில் வாக்குப்பதிவு நிலவரத்தை அறிவிப்பதில் தேர்தல் ஆணையத்தின் குளறுபடிகள் குறித்து அதிகம் விவாதிக்கப்படுகிறது. ஆனால், வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது, சென்னையில் வாக்குப்பதிவு குறைந்துபோனது போன்றவை போதிய கவனம் பெறவில்லை. ஒவ்வொரு தேர்தலிலும் நீடிக்கும் இந்த விவகாரங்களுக்குத் தீர்வுகாண, தேர்தல் ஆணையத்திடம் என்ன திட்டங்கள் இருக்கின்றன என்கிற கேள்வி எழுகிறது.

பெயர் எப்படி விடுபடுகிறது? ஏப்ரல் 19 அன்று தமிழ்நாட்டில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் 1.88 கோடிப் பேர் (மொத்த வாக்காளர்களில் 30% பேர்) வாக்களிக்கவில்லை. தேவையான ஆவணங்களோடு வாக்குச்சாவடிகளுக்குச் சென்று, பட்டியலில் பெயர் இல்லாமல் ஏமாற்றத்தோடு திரும்பியவர்களும் ஏராளம்.

வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்து, வாக்குரிமையைச் செலுத்தாதது வாக்காளரின் தனிப்பட்ட விவகாரமாகப் பார்க்கப்படுகிறது. ஆனால், வாக்காளர் பட்டியலில் பெயர் இருக்கும் என்கிற நம்பிக்கையில் வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்களிக்க முடியாமல் திரும்பும் வாக்காளர்களின் குமுறல்களுக்கு யார் பதிலளிப்பது?

ஒரே வீட்டில் பல ஆண்டுகளாக வசித்து வருபவர், பல தேர்தல்களாக வாக்களித்துவரும் சூழலில், அவருடைய பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து எப்படி விடுபட்டுப் போகும்? தேர்தல் பணியாளர்கள் எந்த அடிப்படையில் பெயரை நீக்குகிறார்கள்? பெயர் நீக்கத்தைத் தேர்தல் பதிவு அதிகாரி (ERO) எப்படி அங்கீகரிக் கிறார்? இப்படி அடுக்கடுக்காகக் கேள்விகள் எழுகின்றன.

இந்தியத் தேர்தல் ஆணைய விதிகளின்படி குடும்ப உறுப்பினர்களிட மிருந்து படிவம் 7ஐப் பெற்றால் வாக்காளர் பெயரை நீக்கலாம். ஒரு வாக்காளர் மரணமடைந்தாலோ, குறிப்பிட்ட முகவரியிலிருந்து வீடு மாறிச் சென்று விட்டாலோ தாமாக முன்வந்து பெயர்களை நீக்கும் அதிகாரம் தொகுதியின் தேர்தல் பதிவு அதிகாரிக்கு உண்டு.

இதுபோன்ற காரணங்கள் இருந்தாலும்கூட வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ள, தேர்தல் ஆணைய வழிகாட்டுதல்கள்படி வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLOs) களத்துக்குச் சென்று சரிபார்க்க வேண்டும். ஒரு வாக்காளரின் பெயரை நீக்குவதற்கு முன்பு நோட்டீஸ் வழங்க வேண்டும் என்று ஆணையத்தின் வழிகாட்டுதலும் பரிந்துரைக்கிறது.

ஆனால், அது சாத்தியப்படுவதில்லை என்பதே நடைமுறை யதார்த்தம். தமிழ்நாட்டில் 2022 ஜனவரி முதல் 2024 ஜனவரி வரை 12.45 லட்சம்

வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டிருப்பதாகத் தேர்தல் ஆணையத் தரவுகள் தெரிவிக்கின்றன. இந்தப் பெயர் நீக்கத்துக்கு வாக்காளர்கள் மரணமடைந்தது, வீடு மாறியது போன்ற காரணங்களே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

யார் பொறுப்பு? குறிப்பிட்ட முகவரியில் வசித்து நீண்ட காலமாக வாக்களிக்கும் வாக்காளர்கள் தங்கள் பெயர் ஏன் விடுபட்டுள்ளது என்று தேர்தல் நாளில் புகார் தெரிவிப்பது, பெயர் நீக்கத்துக்கு முன்பாகக் கள ஆய்வு மேற்கொள்ளப்பட வில்லை என்பதையே காட்டுகிறது. இந்த அடிப்படையில், வருங்காலத்தில் 'வாக்காளர் பெயர் நீக்கப்படும் முன்பு நோட்டீஸ் அளிக்க வேண்டும்', 'கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும்' என்கிற விதிகளைக் கட்டாயமாக்குவது இதுபோன்ற சிக்கல்களைத் தடுக்கும்.

வாக்காளர் பெயர் நீக்கத்தைப் பொறுத்தவரை, தேர்தல் ஆணையத்துக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ, அதே அளவுக்கு அரசியல் கட்சிகளுக்கும் பொறுப்பு இருக்கிறது. வாக்காளர் பட்டியலில் தேர்தல் ஆணையம் திருத்தங்களை மேற்கொள்ளும்போது, அதுதொடர்பான விவரங்கள் அடங்கிய பட்டியல் அரசியல் கட்சிகளின் பூத் கமிட்டிகளுக்கு வழங்கப்படும்.

அவர்கள் அதை ஆராய்ந்து எதிர்ப்புத் தெரிவிக்காதபோது, வாக்காளர் பெயர் நீக்கம் எளிதாகி விடுகிறது. கோவையில் ஒரு லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டிருப்பதாகத் தேர்தல் நாளன்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டியிருந்தார். தேர்தல் நடைபெறும் போதோ முடிந்த பிறகோ அரசியல் கட்சிகள் இதுபோன்ற குற்றச்சாட்டுகளை வைப்பது தங்களையே குறைகூறிக்கொள்வதற்குச் சமமானது.

இந்த விஷயத்தில் வாக்காளர்கள் மீதும் குற்றச்சாட்டு உண்டுதான். இறுதி வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர் இருக்கிறதா என்று வாக்காளர்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும் என்பதும் உண்மைதான்.

ஆனால், ஒரே முகவரியில் வசித்து, தொடர்ச்சியாக வாக்களித்துக் கொண்டிருக் கும் ஒரு வாக்காளர், தன் பெயர் இறுதி வாக்காளர் பட்டியலில் இருக்கிறதா என்று உறுதி செய்துகொள்ள வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? தன் பெயர் நீக்கப்பட்டுவிடும் என்று சந்தேகிக்க வாக்காளருக்கு என்ன முகாந்திரம் இருக்க முடியும்?

சரியும் சென்னை வாக்குப்பதிவு: தலைநகர் சென்னை குறைவான வாக்குப் பதிவுக்காக மீண்டும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கிறது. இந்த முறை மாநிலத்தின் வாக்குப்பதிவு சராசரி 69.72%; சென்னையின் சராசரி 56.08%. வித்தியாசம் 13.64%. சென்னையின் வாக்குப்பதிவு எப்போதுமே மாநிலத்தின் சராசரி வாக்குப்பதிவைத் தாண்டியதும் இல்லை; நெருங்கி வந்ததும் இல்லை.

கடந்த 20 ஆண்டுகளின் 2004 (60.6%), 2009 (73.1%), 2014 (73.7%), 2019 (73.3%) மக்களவைத் தேர்தல்களில் மாநில சராசரி வாக்குப்பதிவுக்கும் சென்னையின் வாக்குப்பதிவுக்கும் முறையே 13%, 10.3%, 11.9%, 10.8% வித்தியாசம் உண்டு. விதிவிலக்காக 2006 சட்டமன்றத் தேர்தலில்தான் அதிகபட்சமாக 64% பேர் சென்னையில் வாக்களித்திருக்கிறார்கள். அப்போது மாநிலத்தின் சராசரி வாக்குப்பதிவு 70.8%. மாநிலத்தின் சராசரியோடு ஒற்றை இலக்க வித்தியாசத்துக்கு சென்னை வாக்குப்பதிவு நெருங்கி வந்தது அப்போது மட்டுமே.

சென்னையில் மட்டுமல்ல பெங்களூரு, மும்பை, கொல்கத்தா, ஹைதராபாத் போன்ற பெருநகரங்களிலும் வாக்குப்பதிவு குறைவாக இருப்பதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. பெருநகரங்களில் வாடகைக்குக் குடியிருப்போர் அதிகம். இவர்கள் கல்வி, வேலை, வசதி, வீட்டு வாடகை உயர்வு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அடிக்கடி வீடு மாறும்போது, தங்கள் பெயரை ஒரு தொகுதியிலிருந்து இன்னொரு தொகுதிக்கு மாற்றிக் கொள்வதில் சுணக்கம் காட்டுகிறார்கள்.

வாக்காளர் பட்டியலில் பெயர் இருக்கும் பகுதிக்கு வந்து வாக்களிப்பதிலும் மெத்தனம்

காட்டுகிறார்கள். வாக்காளர் பட்டியலில் சென்னையில் பெயரைச் சேர்த்து விட்டு, தேர்தல் தொடர் விடுமுறைக்குச் சொந்த ஊருக்குச் செல்வது அல்லது சொந்த ஊர், சென்னை என இரண்டு இடங்களிலும் வாக்காளர் பட்டியலில் பெயரைச் சேர்ப்பது போன்ற சிக்கல்களும் இதில் உண்டு.

இதுபோன்ற சிக்கல்களைத் துல்லியமான வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதன் மூலமே களைய முடியும். அதற்கு வாக்காளர் அடையாள எண்ணுடன் ஆதார் எண்ணை இணைப்பது ஒரு தீர்வாக இருக்கலாம். ஏற்கெனவே, ஆதார் எண்ணுடன் பல சேவைகள் இணைக்கப் பட்டுள்ளன. அதில் வாக்காளர் அடையாள எண்ணைச் சேர்ப்பதும் பலன்அளிக்கும். இந்தக் கருத்தைத் தலைமை தேர்தல் முன்னாள் ஆணையர் என்.கோபால சுவாமியும் வலியுறுத்தியிருக்கிறார். இதன் மூலம் ஒருவருக்கு ஒரு வாக்கு என்பது உறுதி செய்யப்படும்.

உள்ளாட்சி அமைப்புகளில் இறப்புச் சான்றிதழுக்கு ஆதார் எண் கேட்கப்படுவ தால், இறந்தவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து எளிதாக நீக்கிவிடலாம். ஒருவர் ஆதாரில் வீட்டு முகவரியைத் திருத்தம் செய்யும்போது, அதன் அடிப்படையில் வாக்காளர் வசிக்கும் இடத்துக்குப் பெயரையும் மாற்றலாம். ஆதாரில் பதியப்பட்டுள்ள கைபேசி எண் மூலம் தேர்தல் ஆணையப் பணியாளர்கள் வாக்காளரைத் தொடர்புகொள்ள முடியும்.

தற்போது தன்னார்வரீதியில் ஆதார் எண்ணுடன் வாக்காளர் அடையாள எண் இணைக்கப்படுகிறது. அதைக் கட்டாய மாக்கத் தேவையான நடவடிக்கையைத் தேர்தல் ஆணையமும் மத்திய அரசும் மேற்கொள்ள வேண்டும். இது வாக்காளர் பட்டியலை எளிமைப்படுத்தவும் எதிர்காலத் தில் வாக்குப்பதிவு அதிகரிக்கவும் உதவக்கூடும்.

நன்றி : தி இந்து தமிழ் தென்திசை



சேலம் மாவட்ட வருவாய் அலகில் சேலம் வட்ட அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வரும் திரு.V.P.சரவணன், சிறுநீரக கல் காரணமாக உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டு கடந்த வாரம் சேலம் பிரியம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இரண்டு சிறுநீரகத்திலும் இருந்த கற்கள் முற்றிலுமாக அகற்றப்பட்டன. இதற்கான செலவீனம் ரூ.1,70,000/- ஆனது. இந்த தொகை நமது அரசு காப்பீடு திட்டத்தில் இழப்பீடாக பெற இயலவில்லை. எனவே மருத்துவ செலவீனத்திற்காக உதவிட சங்கத்திடம் கோரியதின் பேரில் TNROA காப்பீடு திட்டத்தின் கீழ் ரூ.30,000/-ம் மருத்துவ செலவீனத்திற்கு வழங்கப்பட்டது.

## தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 11 நாட்கள் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தின் காரணமாக பெறப்பட்ட இரண்டு அரசாணைகள்.

சுருக்கம்

வருவாய் நிருவாகம் – மோட்டார் வாகனம் – சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலர்களின் பயன்பாட்டில் உள்ள முதிர்ந்த நிலை வாகனங்களை கழிவு செய்து அவற்றிற்குப் பதிலாக 114 புதிய வாகனங்களைக் கொள்முதல் செய்தல் – ரூ.10.00 கோடி நிர்வாக அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

வருவாய் நிருவாக அலகு வ.நி.2(2) பிரிவு

அரசாணை (நிலை) எண் 132

நாள் : 15.03.2024
சோபகிருது ஆண்டு, பங்குனி 2
திருவள்ளுவர் ஆண்டு 2055

படிக்கவும்

கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் கடித எண்.பணி 6(3)/0104/477/2023, நாள் 26.10.2022 மற்றும் 17.10.2023.

*****

ஆணை

மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், பல்வேறு மாவட்டங்களில் சார் ஆட்சியர் முதல் வட்டாட்சியர் வரையிலான அலுவலர்களின் பயன்பாட்டில் உள்ள 250 எண்ணிக்கையிலான வாகனங்கள் முதிர்ந்த நிலையில் உள்ளதாகவும், மேற்படி வாகனங்கள் அரசாணை எண்.2275, உள் (போக்குவரத்து-இ) துறை, நாள் 10.10.1990இல் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை பூர்த்தி செய்வதாலும், அவ்வரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி வாகனங்களை முதிர்ந்த நிலையில் கழிவு செய்ய மோட்டார் வாகன பராமரிப்புத்துறையின் அறிக்கையே போதுமானது என்பதாலும், மேற்படி நேர்வினை சிறப்பினமாகக் கருதி 200 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்யும்போது மேற்படி தகுதியற்ற 250 வாகனங்களையும் கழிவு செய்யலாம் என கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், புதிய வாகனம் வாங்குவதற்கு அரசாணை எண். 232 உள் (போக்குவரத்து–IV) துறை. நாள் 15.03.2017இல் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை வரம்பின்படி சார் ஆட்சியர் முதல் வட்டாட்சியர் வரையிலான அலுவலர்களுக்கு 2023ஆம் ஆண்டிற்கு ரூ.7,31,000/ மதிப்பீட்டில் வாகனம் கொள்முதல் செய்ய நிதி வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், BS-IV ரக வாகனங்கள் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளதாலும், தற்போது GeM Portalஇல் விற்பனையில் உள்ள BS-IV ரக Bolero வாகனங்களில் குறைந்தபட்ச விலையானது ரூ.8,12,018/- ஆக உள்ளது எனவும் மேலும், எதிர்பார்ப்பு வாகன ஏற்றத் தொகையில் (Escalation Charges) 10 சதவிகிதம் ரூ.81,202/ சேர்த்து ஒரு வாகனத்தின் விலை ரூ.8,93,220/ ஆக, 114 புதிய வாகனங்கள் (சார் ஆட்சியர்/ வருவாய் கோட்டாட்சியர் 34, வட்டாட்சியர் 80) அலுவலர்களின் பயன்பாட்டிற்கு கொள்முதல் செய்ய ரூ.22,33,05,000/ நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, பின்வரும் மாவட்டங்களிலுள்ள சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலர்களின் பயன்பாட்டிற்கு 114 வாகனங்களை (Bolero BS - VI, Non A/C) கொள்முதல் செய்வதற்கு ரூ. 10.00 கோடி (ரூபாய் பத்து கோடி மட்டும்) நிருவாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

I. சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர்

| எண். | மாவட்டம் | வாகனம் பயன்படுத்தும் அலுவலர்கள் விபரம் | மொத்த வாகனங்கள் |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | வருவாய் கோட்டாட்சியர், தாம்பரம்<br>வருவாய் கோட்டாட்சியர், மதுராந்தகம்<br>வருவாய் கோட்டாட்சியர், செங்கல்பட்டு | 3 |
| 2 | கடலூர் | வருவாய் கோட்டாட்சியர், சிதம்பரம் | 1 |
| 3 | தருமபுரி | சார் ஆட்சியர், தருமபுரி<br>வருவாய் கோட்டாட்சியர், அரூர் | 2 |
| 4 | திண்டுக்கல் | வருவாய் கோட்டாட்சியர், கொடைக்கானல் | 1 |
| 5 | ஈரோடு | வருவாய் கோட்டாட்சியர், ஈரோடு<br>வருவாய் கோட்டாட்சியர், கோபி | 2 |
| 6 | கள்ளக்குறிச்சி | வருவாய் கோட்டாட்சியர், கள்ளக்குறிச்சி<br>வருவாய் கோட்டாட்சியர், திருக்கோவிலூர் | 2 |
| 7 | கரூர் | வருவாய் கோட்டாட்சியர், கரூர் | 1 |
| 8 | கிருஷ்ணகிரி | வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி | 1 |
| 9 | மதுரை | வருவாய் கோட்டாட்சியர், உசிலம்பட்டி | 1 |
| 10 | நாமக்கல் | வருவாய் கோட்டாட்சியர், நாமக்கல்<br>வருவாய் கோட்டாட்சியர், திருச்செங்கோடு | 2 |
| 11 | நீலகிரி | வருவாய் கோட்டாட்சியர், கூடலூர்<br>சார் ஆட்சியர், குன்னூர் | 2 |
| 12 | பெரம்பலூர் | வருவாய் கோட்டாட்சியர், பெரம்பலூர் | 1 |
| 13 | புதுக்கோட்டை | வருவாய் கோட்டாட்சியர், அறந்தாங்கி<br>வருவாய் கோட்டாட்சியர், புதுக்கோட்டை | 2 |
| 14 | சேலம் | சார் ஆட்சியர், மேட்டூர்<br>வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி<br>வருவாய் கோட்டாட்சியர், ஆத்தூர் | 3 |
| 15 | சிவகங்கை | வருவாய் கோட்டாட்சியர், சிவகங்கை<br>வருவாய் கோட்டாட்சியர், தேவகோட்டை | 2 |
| 16 | தஞ்சாவூர் | வருவாய் கோட்டாட்சியர், தஞ்சாவூர் | 1 |
| 17 | திருச்சி | வருவாய் கோட்டாட்சியர், இலால்குடி | 1 |

| | | | |
|---|---|---|---|
| 18 | திருவாரூர் | வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி | 1 |
| 19 | தூத்துக்குடி | வருவாய் கோட்டாட்சியர், கோவில்பட்டி | 1 |
| 20 | திருப்பூர் | வருவாய் கோட்டாட்சியர், உடுமலைப்பேட்டை | 1 |
| 21 | திருவள்ளூர் | சார் ஆட்சியர், திருத்தணி | 1 |
| 22 | விழுப்புரம் | சார் ஆட்சியர், திண்டிவனம்<br>வருவாய் கோட்டாட்சியர், விழுப்புரம் | 2 |
| | | மொத்தம் | 34 |

**II**. வட்டாட்சியர்

| எண். | மாவட்டம் | வாகனம் பயன்படுத்தும் அலுவலர்கள் விபரம் | மொத்த வாகனங்கள் |
|---|---|---|---|
| 1 | அரியலூர் | வட்டாட்சியர், ஜெயங்கொண்டம் | 1 |
| 2. | செங்கல்பட்டு | வட்டாட்சியர், செங்கல்பட்டு<br>வட்டாட்சியர், செய்யூர்<br>வட்டாட்சியர், திருக்கழுகுன்றம்<br>வட்டாட்சியர், தாம்பரம் | 4 |
| 3 | சென்னை | வட்டாட்சியர், அம்பத்தூர்<br>வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் | 2 |
| 4 | கோயம்புத்தூர் | வட்டாட்சியர், மேட்டுப்பாளையம்<br>வட்டாட்சியர், சூலூர் | 2 |
| 5 | கடலூர் | வட்டாட்சியர், சிதம்பரம்<br>வட்டாட்சியர், பண்ருட்டி<br>வட்டாட்சியர், குறிஞ்சிப்பாடி | 3 |
| 6 | தருமபுரி | வட்டாட்சியர், பென்னாகரம்<br>வட்டாட்சியர், அரூர் | 2 |
| 7 | திண்டுக்கல் | வட்டாட்சியர், ஆத்தூர்<br>வட்டாட்சியர், ஒட்டன்சத்திரம்<br>வட்டாட்சியர், பழனி<br>வட்டாட்சியர், கொடைக்கானல் | 4 |
| 8 | ஈரோடு | வட்டாட்சியர், பெருந்துறை<br>வட்டாட்சியர், கோபி | 2 |
| 9 | கள்ளக்குறிச்சி | வட்டாட்சியர், சங்கராபுரம்<br>வட்டாட்சியர், கள்ளக்குறிச்சி<br>வட்டாட்சியர், உளுந்தூர்பேட்டை | 3 |
| 10 | காஞ்சிபுரம் | வட்டாட்சியர், திருப்பெரும்புதூர் | 1 |

| | | | |
|---|---|---|---|
| 11 | கரூர் | வட்டாட்சியர், குளித்தலை<br>வட்டாட்சியர், கிருஷ்ணராயபுரம்<br>வட்டாட்சியர், அரவக்குறிச்சி | 3 |
| 12 | கிருஷ்ணகிரி | வட்டாட்சியர், கிருஷ்ணகிரி<br>வட்டாட்சியர், ஓசூர்<br>வட்டாட்சியர், தேன்கனிகோட்டை | 3 |
| 13 | மதுரை | வட்டாட்சியர், திருமங்கலம்<br>வட்டாட்சியர், உசிலம்பட்டி<br>வட்டாட்சியர், பேரையூர் | 3 |
| 14 | மயிலாடுதுறை | வட்டாட்சியர், குற்றாலம் | 1 |
| 15 | நாகப்பட்டினம் | வட்டாட்சியர், திருக்குவளை<br>வட்டாட்சியர், வேதாரண்யம் | 2 |
| 16 | நாமக்கல் | வட்டாட்சியர், திருச்செங்கோடு<br>வட்டாட்சியர், பரமத்திவேலூர் | 2 |
| 17 | நீலகிரி | வட்டாட்சியர், பந்தலூர்<br>வட்டாட்சியர், கோத்தகிரி | 2 |
| 18 | பெரம்பலூர் | வட்டாட்சியர், வேப்பந்தட்டை | 1 |
| 19 | புதுக்கோட்டை | வட்டாட்சியர், திருமயம்<br>வட்டாட்சியர், பொன்னமராவதி<br>வட்டாட்சியர், கரம்பக்குடி | 3 |
| 20 | இராமநாதபுரம் | வட்டாட்சியர், கடலாடி<br>வட்டாட்சியர், கமுதி<br>வட்டாட்சியர், திருவாடளை | 3 |
| 21 | இராணிப்பேட்டை | வட்டாட்சியர், வாலாஜா<br>வட்டாட்சியர், அரக்கோணம் | 2 |
| 22 | சேலம் | வட்டாட்சியர், ஓமலூர்<br>வட்டாட்சியர், மேட்டூர் | 2 |
| 23 | சிவகங்கை | வட்டாட்சியர், திருபுவனம்<br>வட்டாட்சியர், திருப்பத்தூர் | 2 |
| 24 | தென்காசி | வட்டாட்சியர், சங்கரன்கோவில்<br>வட்டாட்சியர், சிவகிரி | 2 |
| 25 | தஞ்சாவூர் | வட்டாட்சியர், பாபநாசம் | 1 |
| 26 | திருச்சி | வட்டாட்சியர், முசிறி<br>வட்டாட்சியர், துறையூர்<br>வட்டாட்சியர், ஸ்ரீரங்கம் | 3 |

| | | | |
|---|---|---|---|
| 27 | திருப்பத்தூர் | வட்டாட்சியர், திருப்பத்தூர்<br>வட்டாட்சியர், ஆம்பூர் | 2 |
| 28 | திருவாரூர் | வட்டாட்சியர், மன்னார்குடி<br>வட்டாட்சியர், திருத்துறைப்பூண்டி | 2 |
| 29 | தூத்துக்குடி | வட்டாட்சியர், திருச்செந்தூர்<br>வட்டாட்சியர், விளாத்திகுளம்<br>வட்டாட்சியர், எட்டையாபுரம் | 3 |
| 30 | திருநெல்வேலி | வட்டாட்சியர், இராதாபுரம் | 1 |
| 31 | திருப்பூர் | வட்டாட்சியர், மடத்துகுளம் | 1 |
| 32 | திருவள்ளூர் | வட்டாட்சியர், கும்மிடிபூண்டி<br>வட்டாட்சியர், திருத்தணி<br>வட்டாட்சியர், பள்ளிப்பட்டு | 3 |
| 33 | திருவண்ணாமலை | வட்டாட்சியர், தண்டராம்பட்டு<br>வட்டாட்சியர், வந்தவாசி | 2 |
| 34 | வேலூர் | வட்டாட்சியர், குடியாத்தம் | 1 |
| 35 | விழுப்புரம் | வட்டாட்சியர், விழுப்புரம்<br>வட்டாட்சியர், செஞ்சி<br>வட்டாட்சியர், வானூர் | 3 |
| 36 | விருதுநகர் | வட்டாட்சியர், திருச்சுழி<br>வட்டாட்சியர், காரியாப்பட்டி<br>வட்டாட்சியர், இராஜபாளையம் | 3 |
| | | மொத்தம் | 80 |

மேலும், மேற்படி 114 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் முதிர்ந்த நிலையிலுள்ள 114 வாகனங்கள் கழிவு செய்தல் ஆகிய நடவடிக்கைகள் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலும் மேற்படி வாகனங்கள் கழிவு செய்யப்பட்ட விவரங்களை மோட்டார் வாகன பராமரிப்புத் துறையிடமிருந்து பெற்று அனுப்பி வைக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“2029 - 00 - நில வருவாய் 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் - மாநில செலவினங்கள் - AA தலைமையிடப் பணியாளர்கள் - வருவாய் நிருவாக ஆணையர் - 321 மோட்டார் வண்டிகள் 01 - வாங்குதல்”

(IFHRMS த.தொ.கு 2029-00-001-AA 32101)

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.6828374/நிதி (வருவாய்)/2024 நாள் 15.04.2024 இசைவுடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வே.ராஜராமன்
அரசுச் செயலாளர்

'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்' திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை தவிர) 'உங்களைத் தேடி, உங்கள் ஊரில் – முகாம் நடத்துதல் – தாலுக்கா ஒன்றுக்கு கூடுதலாக ரூ.30,000/ வழங்க நிருவாக அனுமதி ஆணை – வெளியிடப்படுகிறது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

வருவாய் நிருவாக அலகு, வ.நி.3(2) பிரிவு

அரசாணை (நிலை) எண்:133 தேதி: 15.03.2024

சோபகிருது வருடம், பங்குனி 2,

திருவள்ளுவர் ஆண்டு 2055

படிக்கவும்

1. அரசாணை (நிலை) எண்.22, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (வ.நி.3(2) துறை, நாள் 29.01.2024
2. அரசு கடிதம் எண்.19/வ.நி 3(2)/20241, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள் 12.02.2024
3. அரசாணை (நிலை) எண்.23 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள் 29.01.2024

*****

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, 'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்' திட்ட முகாம் நடத்துவதற்கு வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் உங்களைத் தேடி, உங்கள் ஊரில் முகாம், ஒவ்வொரு மாதமும் நான்காவது புதன்கிழமைக்கு பதிலாக மூன்றாவது புதன்கிழமை நடத்தப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இம்முகாமினை நடந்துவதற்கு 37 மாவட்டங்களுக்கும் (சென்னை நீங்கலாக) தாலுக்கா ஒன்றுக்கு ரூ. 20,000/ வீதம் ரூ.88,00,000/ நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

3. இந்நிலையில், 02.02.2024 மற்றும் 06.02.2024 ஆகிய நாட்களில் தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 'உங்களைத் தேடி, உங்கள்

ஊரில்' திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.20,000/ (தாலுக்கா ஒன்றுக்கு) போதுமானதாக இல்லை எனவும், அதனை ரூ.50,000/ ஆக உயர்த்தி வழங்குமாறு கோரிக்கை வைத்தனர்.

4. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கோரிக்கையை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை நீங்கலாக) "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்ட முகாம் நடத்துவதற்கு ஏற்கெனவே தாலுக்கா ஒன்றுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.20,000/- என்ற தொகையை, ஏப்ரல் 2024 முதல் டிசம்பர் 2024 வரை தாலுக்கா ஒன்றுக்கு ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) என உயர்த்தி வழங்க ஒன்பது மாதங்களுக்கு ரூ.99,90,000/-க்கு (ரூபாய் தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) நிருவாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்க வேண்டும்.

2053-00 - மாவட்ட நிருவாகம் - 093 மாவட்டப் பணியாளரமைப்பு - மாநில செலவினங்கள் AN - 'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்' திட்டம் - 342 - பணி அல்லது பொறுப்பேற்ற செலவுகள் - 01 - பணி அல்லது பொறுப்பேற்ற செலவுகள்.

[IFHRMS DPC: 2053 00 093 AN 34201]

6. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்:7001189/நிதி(வருவாய்)/2024, நாள் 15.03.2024இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வே.ராஜாராமன்
அரசு செயலாளர்



சிவகங்கை மாவட்டத்தில் நடந்த பிரச்சனைக்காக மாவட்ட காவல் கண்காணிப்பாளரை 26.4.2024-ல் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் தோழர் தமிழரசன் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள் சந்திப்பு நடைபெற்றது.

# உழைப்பே தியானம்

ஒரு நாடு செழிப்பதற்கு மழையைக் காட்டிலும் வியர்வையே முக்கியம். நேற்றி வியர்வை நிலத்தில் விழ, உழைக்க மறுப்பவர்களுக்குப் பெய்யும் மழையும் வீணாகிவிடும். உள்ளே போகிற நீர் வெளியே வந்துதான் தீர வேண்டும். விடலைப் பருவத்தில் வியர்வை வாய்க்காலாக வழியாவிட்டால், கடைசிக் காலத்தில் கண்ணீர் கால்வாயாகப் பெருக்கெடுக்கும்.

மற்றவர்களுக்காகப் பணி செய்கிறோம் என நினைத்தால் உடலில் தளர்வும், உள்ளத்தில் சோர்வும் ஏற்படும். நமக்காகவே நாம் பணியாற்றுகின்றோம் என்கிற உண்மை புரிந்தால், உழைப்பு களைப்பை வரவழைக்காது. ஈடுபாடு இல்லாமல் எந்த பணியைச் செய்தாலும் அது வயலுக்குப் பாய்ச்சும் வாய்க்காலாக இல்லாமல், விழலுக்கு இறைத்த நீராகிவிடும். நேரத்தை மாத்திரம் சேர்த்து வைக்க முடியாது. இன்று பணியாற்ற மறுத்தால், ஒருநாள் போனது போனதுதான், மகத்தான மண்டபத்தை உருவாக்க நினைக்கிறபோது, அதில் கலசம் வைக்கிறவர்கள் மட்டுமல்ல கடைக்கால் எழுப்புபவர்களும் அக்கறையோடு பணியாற்றினால்தான் கட்டடம் காற்றில் இடிந்து விழாமல் காப்பாற்றப்படும்.

ஈடுபாடு என்பது தனித்து நிகழ்வது அல்ல. எல்லாவற்றிலும் அக்கறை கொள்பவர்களுக்குத்தான் உழைப்பில் ஈடுபாடு பிறக்கும். சாப்பாட்டைக்கூட சடங்காக உண்பவர்கள் இருக்கிறார்கள். சடலத்தைக் கூடப் பொறுப்புடன் புதைப்பவர்கள் இருக்கிறார்கள். நாம் எந்த ஒரு நேரத்திலும் செய்கிற பணியின் மீது வெறுப்பை வளர்த்துக் கொள்ளக் கூடாது.

விதையை விதைப்பவர்கள் மகசூல் செய்யும்போது ‘பயிர் எப்படியிருக்கும்’ என்பதை மனத்தில் காட்சிப்படுத்தித்தான் ஏர் பிடிக்க முனைகிறார்கள். இறுதியில் எப்படியிருக்கும் என்பதை மனக்கண் முன் விரிவுபடுத்தினாலே உற்சாகம் பிறந்துவிடும். ஆர்வம் விளைந்துவிடும்.

எள் போட்டாலும் விளையாத இந்த இடத்தில் ஏன் வீணாகக் கொத்திக் கொண்டிருக்கிறாய் என்று ஒரு நபர் கேட்டார். அவனோ அதற்குத் தன் புன்னகையை மாத்திரம் பரிசாக அளித்துவிட்டு மறுபடியும் தன் பணியை செய்ய ஆரம்பித்து விட்டான். தன் தலையில் அடித்துக்கொண்டு அந்நபர் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

பத்து ஆண்டுகளுக்குப் பிற அந்த இடத்தை மறுபடியும் அவர் கடக்க நேருகையில் அடையாளம் தெரியாதபடி அது அழகாகி இருந்தது. அவர் விழிகள் வியப்பால் விரிந்தன. அப்போதும் அவன் அங்கே இருக்கிற செடிகளுக்கு இயற்கை உரத்தை இட்டுக் கொண்டிருந்தான். அவனிடம் அவர் கேட்டார் மண் வளமில்லாத இந்நிலத்தில் மழைவளம் இல்லாத இப்பகுதியில் எப்படி உன்னால் இப்படியோர் சொர்க்க சோலையை உருவாக்க முடிந்தது. அவன் சிரித்தவாறே சொன்னான்.

உங்கள் கண்களுக்கு இதைப் பார்க்கிறபோது களர் நிலமாகவே தெரிந்தது. ஆனால் எனக்கோ இதில் சோலை மட்டுமே தென்பட்டது. இதற்குள் ஒளிந்து கிடக்கும் சோலையை வெளிக்கொண்டு வர கருவியாய் இருப்பது மட்டுமே என் பணியாய் நினைத்தேன். என் கை படபட மண் மசிந்தது, கல் கசிந்தது, பாறை இளகியது, வான் சுரந்தது, வளம் நிறைந்தது. நான் என் காட்சியில் கண்ட வடிவத்தை அனைவர் காட்சிக்கும் உட்படுத்தியது மட்டுமே என்னுடைய பணி, இதைச் செய்கிறபோது எனக்குள் இருந்த கடினப் பாறைகளும் தகர்ந்து போயின. பிடிவாதக் கல்லும் கரைந்து போனது. உண்மையில் நான் பண்படுத்தியது என் இதயத்தைத்தான் என்பதை உணர்ந்து கொண்டேன்.

உலகத்திலேயே தலைசிறந்த விடுதிகளைக் காட்டிலும், தாய் தயாரிக்கும் உணவே தன்னிகரற்றது என்பதற்குக் காரணம், அது ஈடுபாட்டுடன் ஆக்கப்படுவதால் தான். ஈடுபாட்டுடன் பணி செய்கிறபோது இயற்கையே நம் பக்கம் சாய்ந்து விடுகிறது. நம் வைராக்கியத்தைச் சோதித்துப் பார்த்துவிட்டு அது அளவில் அதிகம் என்பது தெரிந்தவுடன், இயைந்து கொடுக்க ஆரம்பித்து விடுகிறது.

இந்தியத் திருநாடு உலகத்திலேயே உன்னத இடத்தைப் பெறவேண்டுமென்றால் அணு ஆயுதங்களால் அது நிகழாது. பொருளாதாரப் புரட்சியாலும் நேர்ந்துவிடாது. அத்தனை விரல்களும் மொத்தமாய் சேர்ந்து, உத்தமப் பணிகளை உவகையுடன் செய்தால் உன்னதமடைவது உடனே நிகழும். தன்னிறைவு என்பது தானோ முகிழ்க்கும்.

நன்றி : திரு.பெ.இறையன்பு, இ.ஆ.ப.,

இரா.மங்களபாண்டியன்
மாநில துணைத்தலைவர்

**ABSTRACT**

RevenueAdministration - Amendment to Guidelines and Procedures for issuance of Legal Heir Certificate -Issued.

------------------------------------------------------------------------------------------------------------------

**REVENUE ANDDISASTERMANAGEMENT. REVENUEADMINISTRATION WING. RA-3(2} SECTION**

**G.O.(Ms.)No.110** **Dated:13.03.2024**

சோபகிருது வருடம், மாசி 30,
திருவள்ளுவர் ஆண்டு 2055

**Read:**

1. Hon'ble High Court of Madras order dated 17.06.2022 and 12.08.2022 in W.P.No.25247 of 2021 and batch cases.
2. G.O.(Ms) No.478, Revenue and Disaster Management [RA-3(2)] Department, dated 29.09.2022.
3. Hon'ble High Court of Madras Order dated 04.01.2023 in W.P.No.25247 of 2021and batch cases.
4. From the Additional Chief Secretary/Commissioner of Revenue Administration letter No.RA.5(3)/17167/2020,dated 31.05.2023.
5. Hon'ble High Court of Madras Order dated 10.07.2023 in W.P.No.20189 of 2023.
6. From the Additional Chief Secretary/Commissioner of Revenue Administration letter No.RA.5(3)/17167/2020, dated 01.03.2024.

*****

**ORDER:**

In the Government Order second read above, in supersession of the orders issued earlier, the Government have issued the guidelines and procedures for issuance of Legal Heir Certificate.

2. The Hon'ble High Court of Madras in its order third read above has ordered as follows:-

"—-**XXXXXXXXX**—-

—XXXXXX XXX—-

*5. We are of the opinion that thepower of the Governor under Article 162 of the Constitution of India cannot be trammeled by the order passed by us in these proceedings and it would always be open to the Government to amend G.O. (Ms) No.478 dated29.09.2022 withoutseeking leave of this court in the future.*

*6. We place on record our appreciation to the Government for accepting the suggestions of this court and for putting in place a robust mechanism for the issuance of Legal Heir Certificate.*"

3. The Hon’ble High Court of Madras in its order fifth read above has ordered as follows:-

**“—-XXXXXXXXX—-**

**—-XXXXXXXXX—-**

*5. Learned counsel for the petitioner submitted that the said G.O., is flawed for the reason that it overlooks the case where a person is married and died a widower or a widow, without any issues. Ifsuch person is a male, andif he has no parents living on the date of his death, one of his Class-II heirs has power under the Hindu Succession Act 1956, then necessarily hissiblings namely the brothers and sisters would be his Class-II heirs.*

*6. Prima facie, this Court considers that the G.O., does not appear to have taken into account Schedule II of the Hindu Succession Act1956 inframing the G.O.*

*7. The Government is required to spend time as to the correctness of theG.0., in the fight of what the personal law of the country provides in this regard, and required to tweet in the said G.O., dated 29.9.2022. For the presene the respondent is directed to dispose of the petitioner’s representation dated 22.5.2023 with in a period of eight (8)weeks from today.*

*8. This writ petition is accordingly disposed of. No Costs.*”

4. Accordingly, in the letter sixth read above, the Additional Chief Secretary/Commissioner of Revenue Administration has forwarded the amendment proposal and requested the Government to issue necessary amendments to the Guidelines and Procedures issued in G.O.(Ms) No.478, Revenue and Disaster Management Department, dated 29.09.2022 for issue of Legal Heir Certificate based on the orders of the High Court of Madras in W.P.No.20189/2023, dated 10.07.2023.

5. The Government after careful examination decided to accept the proposal of the Additional Chief Secretary/Commissioner of Revenue Administration and accordingly issue the following amendments to Clause 2 of the Guidelines and Procedures for issuance of Legal Heir Certificate issued in the G.O. second read above.

**Amendment**

**Inthe said G.O., in theAnnexurefor Clause 2 the following Clause shall be substituted:**

“ 2. Legal Heirship (Relationship) Certificate shall be issued to the applicant(s) irrespective of the Religions / Gender, with the name of the following persons; their relationship with the deceased and their living status:

**I. (A) In case of death of Married Person**

i. Spouse(s) of the deceased (Mention the names of the spouses, if more than one spouse, if permissible under relevant personal Law)

ii. Children/Legally adopted Children of the deceased

iii. Parents of the deceased

**(B) In case of death of Re-married Person,** after the demise of legally wedded wife or after the divorce granted by competent Court or permissible under the Personal Law, concerned.

i. Children of the pre-deceased/legally divorced wife

ii. Existing Spouse(s)of the deceased, (Mentionthe names ofthe spouses, if more than one spouse, ifpermissible under relevant Personal Law)

iii. Children/Legally adopted Children of the deceased

iv. Parents of the deceased

**(C) Incase of death of Un-Married Person**

i. Parents of the deceased

ii. Siblings (Brothers and Sisters) of the deceased

**(D) If both spouses died, with Children**

i. Children/Legally adopted Children of the deceased

ii. Parents of the deceased

**(E) If both spouses died, without Children**

i. Parents of the deceased

ii. Siblings (Brothers and Sisters) of the deceased

**II. The following aspects shall be mentioned in the'Legal Heir(ship) Certificate',**

*As per the order of the Hon'ble High Court of Madras, dated 17.06.2022in W.P.No.2S247of2021

(i) This is onlya relationship certificate, indicating the names of the persons and their relationship, with the deceased;

(ii) This is an opinion of issuing authority, as to the relationship of the persons named in the certificate, with the deceased, based on the information furnished by the applicant(s) and on verification of the information, by a discreet enquiry conducted by the office of the issuing authority;

(iii) Thiscertificatecannotbeequatedtoasuccessioncertificateissuedbya Court;

(iv) The certificate issued by the Tahsildar does not affect the legal right of any party and has no bearing on the status of the legal heir which is conferred on an individualunder his /her personal law; and

(v) This certificateis liable to bere called by the issuing authority, if it isfound that the information furnished is false or the certificate is obtained on suppression of material facts or fraudulently, in any other means.

**III. The following clause shall also be added in the'Legal Heir(ship) Certificate':**

These Guidelines are applicable, only to the applications that were made under G.O.(Ms)No.478, Revenue and Disaster Management [RA-3(2)] Department, dated 29.9.2022 and pending without any decision or made after the implementation of these Guide lines and issuance of certificate there on and it wouldnotbe applicable or not enforceable to any certificate issued prior to the seguideline.

These guidelines would not affect or alter any certificate, which was issued prior to these guidelines, published in G.O.(Ms.) No.478, Revenue and Disaster Management [RA-3(2)] Department, dated 29.9.2022."

**(ByOrderoftheGovernor)**

**V.Rajaraman**

**Secretary to Government**

Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.



மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் பொய்யாமொழி அவர்களிடம் மனு அளித்தபோது



மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றுத்துறை அமைச்சர் சீ.வீ.மெய்யநாதன் அவர்களிடம் மனு அளித்தபோது



மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் காந்தி அவர்களிடம் மனு அளித்தபோது

Under Postal Regd No. : TN/CH(C) / 295 / 15-17
RNI No. TN BIL 2000 / 3800 Dt : 6.6.2002




தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்ட TNROA மாவட்ட மைய கட்டிடமான சுந்தர்ராஜன் மேன்ஷனில் 17.3.2024 அன்று நடைபெற்றது.



Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.